**மத்திய நுவரகம் பலாத பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மத்திய நுவரகம் பலாத பிரதேச சபையின் நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2014 நவம்பர் மாதத்தின் போது வாழ்வின் எழுச்சி திணைக்களத்தினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 324,143 பெறுமதியான 300 கல்வனைஸ் குழாய்கள் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,683,183 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,719,342 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 நிலுவை கடை வாடகை

மீளாய்வாண்டின் இறுதி வரையில் பெறவேண்டிய ரூபா 273,876 தொகையான நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதி வரையில் பெறவேண்டிய ரூபா 4,944,557 நிலுவை முத்திரைக் கட்டண வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம்

சபையினால் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 590,968 தொகையான நிலுவை நீதிமன்றத் தண்டப்பண வருமானத்தை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.2.4 வீதவரி

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,113,950 தொகையான நிலுவை வீதவரியை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.2.5 தொலைத் தொடர்பு கோபுரக் கட்டணங்கள்

மீளாய்வாண்டின் இறுதி வரையில் சபை அதிகாரப் பிரதேசத்தில் 34 தொலைத் தொடர்பு கோபுரங்களை நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அக்கோபுரங்களுக்குரிய கம்பனிகளிலிருந்து வருடாந்த வியாபார அனுமதிப்பத்திரங்கள் மற்றும் வியாபார வரி என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

# 03. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய சபைக்கு கிடைக்க வேண்டிய முத்திரை கட்டண வருமானத்தில் ரூபா 789,104 தொகை அநுராதபுரம் மாநகர சபைக்கும் ரூபா 445,000 கிழக்கு நுவரகம்பலாத பிரதேச சபைக்கும் மாகாண இறைவரி திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் உரிய பதிவு ஆவணங்களின் சரியானதன்மையை உறுதிப்படுத்தி அந்த முத்திரைக் கட்டண வருமானத்தை மீண்டும் சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபையில் சேவை புரிந்து ஓய்வுபெற்ற, சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 12 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 189,180 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 04 ஆண்டுகள் முதல் 10 ஆண்டு காலப்பகுதியில் அறவிடப்படாமல் காணப்படுகின்ற நிலைமையில் அப் பணத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2007 ஆம் ஆண்டில் சபைக்கு கிடைக்கப் பெற்ற ரூபா 2,800,000 பெறுமதியான டிரக்டர் மறறும் 07 பவுசர் என்பன மோட்டார் வாகன சட்டம் (அதிகாரம் 203) 2(i) பிரிவின் பிரகாரம் 2016 மே 30 ஆந் திகதி வரையிலும் உரிய பதிவுகள் செய்யப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(ஈ) 2015 மே 13 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணாக நடவடிக்கை எடுத்து சபை நிதியத்திலிருந்து ரூபா 300,000 செலவு செய்து தலைவர் மற்றும் உறுப்பினர்கள் வெளிநாட்டு சுற்றுலாக்களில் ஈடுபட்டிருந்தனர்.

(உ) சபை அதிகாரப் பிரதேசங்களில் அமைந்துள்ள 96 ஏக்கர் அளவிலான 33 மயான பூமிகள் தொடர்பாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் 2006 நவம்பர் 14 ஆந் திகதிய பீ.எல்/07/01/53 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகாரசபைகளை மீளமைத்தல் சுற்றறிக்கை இலக்கம் 09 குறிப்பிடப்பட்ட 02 ஆவது முன்மொழிவில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையினால் முன்னுரிமை வீதி பராமரிப்பு பட்டியல் தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் 2005 நவம்பர் 08 ஆந் திகதிய பீ.எல்./07/01/53 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகாரசபைகளை மீளமைத்தல் சுற்றறிக்கை இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்ட 03

ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் பரிந்துரைகளை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் வெளியேற்றுவதற்கு குழிகளை அமைப்பதற்காக மீளாய்வாண்டில் ரூபா 185,500 செலவிடப்பட்டிருந்த போதிலும் அவற்றை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கூட்டுப்பசளை பிரிவு அமைந்துள்ள இடத்திற்கு அருகில் உள்ள காட்டில் கொட்டப்பட்டு கழிவுப் பொருட்கள் எரிக்கப்படுவது அவதானிக்கப்பட்டது.

### 3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

2014 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ள கூட்டுப்பசளை பிரிவின் பெறுமதியை சபை இனங்காணப்படாமல் இருந்ததுடன் அதனை செயற்பாட்டு மட்டத்தில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக செலவிடப்பட்ட செலவினம் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக பயனற்றதாக காணப்பட்டன.

### 3.4 ஒப்பந்த நிருவாகம்

(அ) வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் 15000 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அத்தேத்கல்ல புபுது முன்பள்ளிக்காக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2015 செப்தெம்பர் 08 ஆந் திகதி ரூபா 481,910 பெறுமதிக்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் இதற்காக சபையினால் ரூபா 435,213 ஒப்பந்தக்காரருக்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்த போதிலும் அக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணியை சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹஸ்டீதன்ன விஹாரையின் நடாத்திச் செல்லப்படும் முன்பள்ளி பாடசாலையின் இடவசதிகள் குறைவாக இருப்பதால் புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்து முன்பள்ளி பாடசாலையை அங்கு நடாத்தி செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஏப்ரல் மாதம் அளவில் களஞ்சிய அறை மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தை சுற்றிய காணி தாழ்ந்த பிரதேசமாகையால் நீரில் மூழ்கும் நிலைமை ஒன்றில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமையில் காணப்படுவதால் இது வரை செலவு செய்யப்பட்ட ரூபா 433,663 ஆக செலவினம் பயனற்றதாக மாறியிருந்தது.

(இ) மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியம் புதிய நிகழ்ச்சித்திட்டம் - 2015 செயற்திட்டத்தின் கீழ் சபையால் செயற்படுத்தப்பட்ட வேண்டுமென அங்கீகரிக்கப்பட்ட ரூபா 1,150,000 தொகைக்கான 05 நிர்மாணங்களை சபையால் செயற்படுத்தப்படாமையால் இரத்தாகியிருந்தது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) சபைக்கு சொந்தமாக காணப்படும் ரூபா 1,575,000 தொகையான மூன்று வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாமல் இருந்ததால் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3,883,280 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் வருமானத்தை ஈட்டுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் பயன்பாட்டின் பொருட்டு

2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 334,132 பெறுமதியான கழிவுப் பொருட்களை வேறாக்கும் இயந்திரம் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) ஒப்பந்த நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்